Regd with the Registrar of Newspaper for India No. **TN TAM/2007/22101**
Regd. **TN/CC(S)Dn/326/13-15** Date of Publication 25th of Every Month


## குடிமங்கலத்தில்
## வல்லமை பயிற்சி முகாம்

POWER MINISTRY TRAINING CAMP 6th batch

Registration Rs.200

GIFTS of the Holy Spirit

Resource Person
**சகோ. பால்ராஜ் கென்னடி**

3/329-D, House of God, Backside of Petrol Bunk
Nall Road, Gudimangalam (PO), Tirupur - 642 201

பரிசுத்த ஆவியின் வரங்கள் – 3 நாள் வல்லமை பயிற்சி முகாம்
மார்ச் – 2014, 20, 21, 23 – வியாழன், வெள்ளி, சனி

**Contact: Pr. P. Ebinesar, Hosue of God**
**Mobile: 98657 91401, 97501 64731**

## மதுரையில்
## வல்லமை பயிற்சி முகாம்

Registration Rs.200

GIFTS of the Holy Spirit

POWER MINISTRY TRAINING CAMP 7th batch

Resource Person
**சகோ. பால்ராஜ் கென்னடி**

Yesu Nammodu Church
135, Bethaniapuram, By-Pass Road, Madurai - 625 010

பரிசுத்த ஆவியின் வரங்கள் – 3 நாள் வல்லமை பயிற்சி முகாம்
ஏப்ரல் – 2014, 18, 19, 20 – வெள்ளி, சனி, ஞாயிறு

**Contact: Pr. L. B. Stephen, Yesu Nammodu Church**
**Mobile: 99449 79577, 91760 55028**


Owned and Published by: **S. Paulraj Kennedy** from A-1, Deju Plaza, No:2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Ph: +91-44-22353500. Printed by **Jolly Peter** at **Sharp Offset Printers.** New no: 96, Old no: 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Ph: +91-44-28480607. Editor: **Nija Kennedy.**

# [illegible] எக்காளம்

Vol. 7 | மார்ச் 2014 | Issue 6 ரூ.20



# முழுமையான கீழ்ப்படிதல்

# ஒளி எக்காளம்

Vol. 7 | மார்ச் 2014 | Issue 6

ஆசிரியர்:
**நிஜா கென்னடி**

வடிவமைப்பு
பால்@விங்ஸ்
+91-98411 81115

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்த பத்திரிகை வேண்டுவோர்
சந்தா அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

உள்நாட்டு வருட சந்தா **ரூ. 200/**
வெளிநாட்டு வருட சந்தா **ரூ. 2000/**

**S. PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு
DD/M.O/Cheque மூலம் அனுப்பவும்.
உங்களது முழுமுகவரியையும் எழுதுங்கள்.
**ICICI** வங்கி வாயிலாகவும்
நீங்கள் அனுப்பலாம்.

**ICICI** வங்கி கணக்கின் பெயர்:
**S. PAULRAJ KENNEDY**
**ICICI** வங்கி கணக்கு எண்:
**0350 0150 7744**
**IFSC No: ICIC0000350**

தொடர்புக்கு

**KENNEDY MINISTRIES**

**எஸ் பால்ராஜ் கென்னடி**
ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ
ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை
சென்னை - 600 015.
தமிழ்நாடு, இந்தியா.
Ph: +91-44-2235 3500
Mobile: +91-9940667881
email: nijakennedy@yahoo.com

WWW.KENNEDYMINISTRIES.ORG

## பெண்கள் உபவாசக் கூட்டம்



**வாரந்தோறும் – வெள்ளிக்கிழமைகளில்**

**காலை 11.00 மணி முதல்**
**1.00 மணி வரை**

இடம்: ஏ-4, டேஜு பிளாசா
2, தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி
சைதாப்பேட்டை, சென்னை – 600 015.
(சைதாப்பேட்டை கோர்ட் அருகில்)

**சகோதரிகள் கலந்துகொள்ளுங்கள்**

## சகோதரரே எங்களுக்காய் **வேண்டிக்கொள்ளுங்கள்!**

- ஒளி எக்காளம் பத்திரிகை, வேத ஆராய்ச்சி கூட்டங்கள், விடுதலை ஊழியங்கள் மற்றும் அனைத்து ஊழியங்களிலும் கிருபை பெருக, பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, அபிஷேகம் அளவில்லாமல் ஊற்றப்பட...
- அனைத்துக் கூட்டங்களிலும் இயேசு கிறிஸ்துவின் மனதுருக்கம் வெளிப்பட்டு, திரள் கூட்டம் அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள...
- பிணியாளிகள் குணமாக, ஏராளமான அற்புதங்களினால் கர்த்தருடைய வார்த்தை உறுதிப்பட...
- பிசாசின் வல்லமை கட்டப்பட, அந்தகார சக்திகள் முறியடிக்கப்பட, கட்டுகள் அறுக்கப்பட...
- சகோதரருக்கும், குடும்பத்தினருக்கும் தேவனுடைய பாதுகாப்பும், பரிபூரண ஆரோக்கியமும், தெய்வீக ஞானமும் உண்டாக....
- பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட...
- கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் தேவநாம மகிமைக்காக இவ்வூழியங்களில் பரிபூரணமாய் நிறைவேற...

# திருநெல்வேலியில்
## வல்லமை பயிற்சி முகாம் - 5வது அணி



ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. கடந்த பிப்ரவரி மாதம் 21, 22, 23 தேதிகளில் பாளையங்கோட்டையிலுள்ள சமாதானம் ஏ.ஜி. சபையில் (சமாதானபுரம்), பரிசுத்த ஆவியின் வரங்கள் குறித்ததான வல்லமை பயிற்சி முகாம் கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நடந்தது. முதல் நாளில் 75 பேராக இருந்த கூட்டம் கடைசி நாளில் 400 பேராக உயர்ந்தது. தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்.

போதகர் கிளாரன்ஸ் மருதையா எல்லா ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்திருந்தார். போதகர் வி.எஸ். சாமுவேல்ராஜ் (சென்னை அடையாறு ஏ.ஜி. சபை), போதகர் பிரேம்குமார் (சமாதானம் ஏ.ஜி. சபை, கிருஷ்ணாபுரம்) முகாமில் உறுதுணையாக இருந்தார்கள்.

பரிசுத்த ஆவியின் வரங்களைக் குறித்து தெளிவாகக் கற்றுக் கொடுக்கக் கர்த்தர் எனக்குக் கிருபை செய்தார். அவருக்கே மகிமை உண்டாகட்டும்.

கிறிஸ்துவுக்குள் அன்புடன்





# முழுமையான கீழ்ப்படிதல்

சகோதரி நிஜா கென்னடி

**நீ அவர் வாக்கை நன்றாய்க் கேட்டு,**
**நான் சொல்வதையெல்லாம் செய்வாயாகில்,**
**நான் உன் சத்துருக்களுக்குச் சத்துருவாயும்,**
**உன் விரோதிகளுக்கு விரோதியாயும் இருப்பேன் .**
(யாத்திராகமம் 23:22)

உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள்; அவர் உன் அப்பத்தையும், உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன். கர்ப்பம் விழுகிறதும் மலடும் உன் தேசத்தில் இருப்பதில்லை; உன் ஆயுசுநாட்களைப் பூரணப்படுத்துவேன். எனக்குப் பயப்படும் பயத்தை உனக்குமுன் செல்லும்படி செய்வேன், நீ செல்லும் இடமெங்குமுள்ள ஜனங்கள் எல்லாரையும் முதுகு காட்டப்பண்ணுவேன் (யாத்திராகமம் 23:25-28).

கர்த்தர் கூறுவதை உண்மையாய் கேட்டுணர்ந்து, அவர் சொல்லுகிற எல்லாவற்றிற்கும் செவிகொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் கர்த்தர் நம்மோடுகூட இருப்பார். அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து, அவரை உண்மையாய் பின்பற்றுகிறவர்களுக்கு, எதிர்த்து நிற்கிற



ஒவ்வொருவருக்கும் கர்த்தர் எதிரியாய், சத்துருவாய் இருப்பார். கர்த்தர் அவர்களுக்கு எதிராய் இருந்து அவர்களைத் தோற்கடிப்பார். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்கிறவர்களுக்குக் கர்த்தர் வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். அதை விசுவாசித்துப் பெற்றுக்கொள்வோம்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு, பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்கு நேராக வழிநடத்திச் சென்றார். பகலிலே மேகஸ்தம்பத்தினாலும், இரவிலே அக்கினி ஸ்தம்பத்தினாலும் கர்த்தர் அவர்களுக்குப் பாதுகாப்பாயிருந்தார். ஜனங்கள் சீனாய் வனாந்திரத்தில் தங்கியிருந்தபோது, கர்த்தர் சீனாய் மலையில், மோசேயோடுகூட பேசினார். நான் உங்களை கழுகைப்போல எகிப்திலிருந்து சுமந்து வந்தேன். எனவே என் கட்டளைகளுக்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டும் என்றும், எனது உடன்படிக்கையை மீறக்கூடாது என்றும், நான் சொல்லுகிறபடி நீங்கள் நடந்தால், சகல ஜனங்களிலும் நீங்கள் விசேஷமான ஜனமாகவும், ராஜரீக ஆசாரியக் கூட்டமான பரிசுத்த ஜனமாகவும் இருப்பீர்கள் என்றும் இஸ்ரவேல் ஜனங்களிடம் சொல்லும்படி கர்த்தர் மோசேயிடம் கூறினார்.

கர்த்தர் அவர்களிடம் உங்களுக்கென்று வைத்திருக்கிற தேசத்திற்கு ஒரு தூதன் உங்களை வழிநடத்துவார்; எமோரியர், ஏத்தியர், பெரிசியர், கானானியர், ஏவியர், எபூசியர் ஆகிய ஜனங்களை நான் அழித்து, அந்த தேசங்களை உங்களுக்கு கொடுப்பேன். அந்த ஜனங்களின் தெய்வங்களை வணங்காமல், அவர்கள் வாழுகிறபடி வாழாமல், அவர்கள் செய்கைகளின்படி செய்யாமல், அவர்கள் விக்கிரகங்களை அழித்து விடும்படி கர்த்தர் கூறினார். அவர்கள் விக்கிரகங்களை வணங்குவதை கர்த்தர் வெறுக்கிறார். என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் (யாத்திராகமம் 20:3). விக்கிரகங்களை வணங்குகிறவர்கள் பாவம் செய்து தேவனுக்குப் பகைவர்களாகிறார்கள். தேவனது தண்டனை அவர்கள்மேல் வரும்.

எகிப்து தேசத்தில், விக்கிரகங்களை வணங்கும் புறஜாதிகளோடு இஸ்ரவேல் ஜனங்கள் வாழ்ந்து வந்ததால், அவர்களுடைய வாழ்க்கை முறைகளும், பழக்க வழக்கங்களும், விக்கிரக ஆராதனையும் ஜனங்களுக்கு வந்துவிடக் கூடாது என்று கர்த்தர் எச்சரித்தார். மேலும் அவர்களைச் சுற்றியிருக்கும் ஜனங்களின் நம்பிக்கையும், நடவடிக்கைகளும் கர்த்தரை விட்டு விலகச் செய்யும்படியாக உள்ளது என்று கர்த்தர் கூறுகிறார். நமக்கு அருகாமையில் வசிக்கிறவர்களின் நடத்தை முறைகள் நம்மைவிட முற்றிலும் வித்தியாசமாயிருக்கலாம். கிறிஸ்தவ வாழ்க்கையானது, கிறிஸ்துவையே விசுவாசித்து வாழ்வதாகும். இயேசு கிறிஸ்துவை அறியாத மக்களின் வாழ்க்கை முறையும், இயேசு கிறிஸ்துவை அறிந்து, அவரில் உறுதியாக நிலைத்திருக்கிறவர்களின் வாழ்க்கை முறையும் முற்றிலும் வித்தியாசமானதாயிருக்கும். நாம் கர்த்தருக்கு பயந்து அவருக்கு கீழ்ப்படிந்து வாழ்கிறோமா இல்லையா என்பதை நம்முடைய வாழ்க்கை முறையை வைத்து அறிந்துகொள்ளலாம். கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்படியாக நாம் வாழுகிறோமா? என்பதை நாம் ஆராய்ந்து அறிவோம்.

இயேசு கிறிஸ்துவை அறிந்த ஒரு சகோதரி தனது கணவனது வேலையின் நிமித்தமாக வேறு ஒரு நகரத்தில் குடியேறினார்கள். அவர்களைச் சுற்றி குடியிருப்பவர்கள் எல்லாம், விக்கிரகங்களை வணங்குகிறவர்களாக இருந்தனர். இந்த சகோதரி, தான் ஒரு கிறிஸ்தவள் என்று சொல்லுவதற்கு வெட்கப்பட்டார்கள். கிறிஸ்தவ குடும்பத்தில் உள்ளவர்கள் என்று சொன்னால், தன்னைச் சுற்றி

## கர்த்தர்

**அவர்களிடம் உங்களுக்கென்று வைத்திருக்கிற தேசத்திற்கு ஒரு தூதன் உங்களை வழிநடத்துவார்; எமோரியர், ஏத்தியர், பெரிசியர், கானானியர், ஏவியர், எபூசியர் ஆகிய ஜனங்களை நான் அழித்து, அந்த தேசங்களை உங்களுக்கு கொடுப்பேன். அந்த ஜனங்களின் தெய்வங்களை வணங்காமல், அவர்கள் வாழுகிறபடி வாழாமல், அவர்கள் செய்கைகளின்படி செய்யாமல், அவர்கள் விக்கிரகங்களை பலித்து விடும்படி கர்த்தர் கூறினார்.**



## கர்த்தருக்கு

**பயந்து அவருக்கு பிரியமான வாழ்க்கை வாழ வேண்டும். தீமையை விட்டு விலக வேண்டும். நம் வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து வாழ வேண்டும். முழுமையாக மனந்திரும்பாமல் கொடுக்கும் காணிக்கை சடங்காச்சாரமாக இருக்கும். தேவனை நேசிக்காமல், அவர் சொல்லுகிறபடி செய்யாமல் கொடுக்கும் காணிக்கை வீண்.**

இருப்பவர்கள் தன்னை மதிக்கமாட்டார்கள், புறக்கணித்து விடுவார்கள் என்று நினைத்து, தான் இந்து குடும்பத்திலிருந்து வந்தவர்கள் என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டார்கள். பின்னர் புறஜாதிகள் வணங்கும் அத்தனை சிலைகளையும் வாங்கி வீட்டிற்கு கொண்டு வந்து, தன்னை சுற்றிக் குடியிருப்பவர்களைப் போல அதற்கு பூஜைகள் பண்ணினார்கள். சமய ஆசாரங்களையும், சடங்காச்சாரத்தையும், மனுஷனுடைய பாரம்பரியத்தையும் பின்பற்றினார்கள். நல்ல நாள், நல்ல நேரம், கிழமைகள் பார்க்கிறவர்களாகவும், கோவில்களுக்குச் சென்று சிலைகளை வணங்குகிறவர்களாகவும், புறஜாதிகள் கொண்டாடும் பண்டிகைகளை கொண்டாடுகிறவர்களாகவும் மாறினார்கள். இயேசு கிறிஸ்துவை வெளிநாட்டினரது கடவுள் என்று சொன்னார்கள். இயேசு கிறிஸ்துதான் உண்மையான ஆண்டவர் என்று அறிந்திருந்தும், அவரைத் தேடாமல், வீணான விக்கிரகங்களை வணங்கி, புறஜாதியாரின் பழக்கவழக்கங்களைப் பின்பற்றினார்கள்.

அந்த சகோதரிக்கு பல வருடங்களுக்குப்பின் குழந்தை பிறந்தது. பல கோயில்களுக்கும், புண்ணிய ஸ்தலங்களுக்கும் சென்றதாலும், விரதம் இருந்ததாலும் பிள்ளை பிறந்தது என்றும், இந்த தெய்வம்தான் பிள்ளையை கொடுத்தது என்றும் சொன்னார்கள். இன்றைக்கும் அந்த சகோதரி விக்கிரக கோயில்களுக்குச் சென்று பொருத்தனையோடுகூட காணிக்கை கொடுத்து வருகிறார்கள். அந்த சகோதரி, கர்த்தரை புறக்கணித்து, அவரை தெய்வமாக ஏற்றுக்கொள்ளாமல், விக்கிரகங்களை தெய்வமாக ஏற்றுக்கொண்டதால் அவர்களுடைய வாழ்க்கை எந்தவித ஆசீர்வாதமும் இல்லாமல் சபிக்கப்பட்டதாயிருந்தது. அந்த சகோதரி நோயினால் வாதிக்கப்பட்டு மிகவும் பலவீனத்தோடுகூட இருக்கிறார்கள். பிள்ளைகள் கர்த்தரைக் குறித்த பயத்தில் வளர்க்கப்படாததால், அவர்களது பிள்ளைகளும் தாங்களாகவே தங்கள் விருப்பப்படி வாழ்க்கைத் துணையைத் தேடிக்கொண்டு தங்கள் இஷ்டம்போல வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த அதிர்ச்சியில் அந்த சகோதரியின் கணவர் இதய நோயினால் மரித்துப் போனார்.

பிள்ளைகளும் தாய்க்கு அடங்காதவர்களாய், கீழ்ப்படியாதவர்களாய், வேதனைப்படுத்துகிறவர்களாய் இருக்கிறார்கள். பிள்ளைகளுடைய குடும்பமும் நிம்மதியில்லாத, சமாதானம் இல்லாத வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பிரியமானவர்களே, இந்த சகோதரி தன்னைச் சுற்றியிருந்த விக்கிரகங்களை வணங்குபவர்களோடு சேர்ந்து, அவர்களுடைய பழக்கவழக்கங்களையும், தெய்வத்தையும் பின்பற்றினதால், அவர்களுடைய வாழ்க்கையும், அவர்களுடைய பிள்ளைகளின் வாழ்க்கையும் எப்படி வீணாய் போனது பாருங்கள். கர்த்தருடைய வார்த்தை என்ன சொல்லுகிறது? ஆகையால் எனக்குப் பிரியமானவர்களே, விக்கிரகாராதனைக்கு விலகி ஓடுங்கள் (1 கொரிந்தியர் 10:14). ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (2 கொரிந்தியர் 6:17).

நாம் கர்த்தருக்கு முதலிடம் கொடுக்காமல், நம் வேலைக்கோ, படிப்புக்கோ, பணத்துக்கோ, பொருட்களுக்கோ, ஆஸ்திக்கோ, கணவனுக்கோ, மனைவிக்கோ, பிள்ளைக்கோ முதலிடம் கொடுத்தால் அதுவும் விக்கிரக ஆராதனையாகி விடுகிறது. பிரியமானவர்களே, தேவனுக்குள்ள இடத்தை வேறு எதற்கும் கொடுக்காதிருப்போம். நம் வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் கர்த்தருக்கு முதலிடம் கொடுத்து, அவரைக் கனப்படுத்துவோம். அநேகர் தங்கள் வாழ்க்கையில் கர்த்தரைத் தேடாமல், அவருக்கு முதலிடம் கொடுக்காமல் வேலை, வேலை என்று பணம் சம்பாதிப்பதற்காக ஓடிக் கொண்டேயிருப்பார்கள். இவர்கள் வாழ்க்கையில் பணம் விக்கிரக ஆராதனையாகி விடுகிறது. சிலர் எனக்கு எல்லாமே என் பிள்ளைதான் என்று சொல்வார்கள். இப்பொழுது பிள்ளை விக்கிரக ஆராதனையாகி விடுகிறது.

கர்த்தருடைய வார்த்தை சாமுவேல் தீர்க்கதரிசி மூலமாக சவுலுக்கு வந்தது. கர்த்தர் சவுலிடம் அமலேக்கியரை முற்றிலுமாக அழித்துப்போடும்படி கூறினார் (1 சாமுவேல் 15:1-13). ஆனால் சவுலோ, கர்த்தருடைய வார்த்தைக்கு முழுமையாக கீழ்ப்படியவில்லை. கர்த்தர் அழிக்கச் சொன்னதை அவன் அழிக்கவில்லை. அமலேக்கியரின் ராஜாவையும், ஆடுமாடுகளில் முதல்தரமானவைகளையும், நலமான எல்லாவற்றையும் அழித்துப்போடாமல் வைத்துக் கொண்டான். கர்த்தருக்கு பலியிடுவதற்காக ஆடுமாடுகளை வைத்திருந்தான். பயனற்ற எல்லாவற்றையும் அழித்துப்போட்டான். தன்னைப் பெருமைப்படுத்தும்படி நினைவுக் கல்லை நாட்டினான். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், கர்த்தர் அழிக்கச் சொன்னவற்றின்மேல் ஆசைப்பட்டு, கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். சவுல், கர்த்தருடைய வார்த்தையை புறக்கணித்தப்படியினாலே, கர்த்தர் அவனை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் (1 சாமுவேல் 15:23).

இரண்டகம்பண்ணுதல் பில்லிசூனிய பாவத்திற்கும், முரட்டாட்டம் பண்ணுதல்











அவபக்திக்கும், விக்கிரக ஆராதனைக்கும் சரியாய் இருக்கிறது (1 சாமுவேல் 15:23). கர்த்தருக்கு கீழ்ப்படிந்து நடப்பதே மேலானது. நாம் எவ்வளவு காணிக்கை கொடுத்தாலும், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் இருந்தால் அவருக்கு பிரியமாய் இருக்க முடியாது. ஒழுங்காக ஆலயத்துக்குப் போவதினால், காணிக்கை, தசம பாகம் கொடுப்பதினால், ஏழைகளுக்கு உதவி செய்வதினால் பக்தியுள்ளவர்களைப் போல வெளியே காண்பிக்கலாம். ஆனால் தேவனை நேசிக்காமல், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், அதற்கு எதிர்த்து நின்று, அடங்காமல் இருப்பது பில்லியசூனியப் பாவத்திற்கு சமம். தற்பெருமை கொள்வது விக்கிரக ஆராதனைக்குச் சமம்.

கர்த்தருக்கு பயந்து அவருக்கு பிரியமான வாழ்க்கை வாழ வேண்டும். தீமையை விட்டு விலக வேண்டும். நம் வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து வாழ வேண்டும். முழுமையாக மனந்திரும்பாமல் கொடுக்கும் காணிக்கை சடங்காச்சாரமாக இருக்கும். தேவனை நேசிக்காமல், அவர் சொல்லுகிறபடி செய்யாமல் கொடுக்கும் காணிக்கை வீண். ஒருவன் முழுமையாக மனந்திரும்பவில்லை என்றால் அவன் தேவனை நேசிக்கவில்லை என்பதை அறிந்துகொள்ளலாம். ஆகையால் விபச்சாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரக ஆராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டு பண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள் (கொலோசெயர் 3:5).

கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள். உமது கட்டளைகளை நாங்கள் கருத்தாய்க் கைக்கொள்ளும்படி நீர் கற்பித்தீர் (சங்கீதம் 119:1,4). கர்த்தருடைய சித்தத்தை அறிந்து அதன்படி நடக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் இருப்பார்கள். அவர்கள் நேர்மையுடன், பொறுப்புணர்ச்சியுடனும், குற்றமற்றமற்றவர்களாக, நல்ல நடத்தையுள்ளவர்களாக, உண்மையுள்ளவர்களாக இருப்பார்கள். பிரியமானவர்களே, நாம் கர்த்தருக்கு பயந்து அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கும்போது, நாம் சந்தோஷமும் சமாதானமும் உள்ள வாழ்க்கையை வாழலாம்.

அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோம் என்பதை அதினால் அறிவோம். அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான். அவனுக்குள் சத்தியமில்லை. அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவஅன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும். நாம் அவருக்குள் நிலைத்திருக்கிறோம் என்பதை அதினால் அறிந்திருக்கிறோம். அவருக்குள் நிலைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும் (1 யோவான் 2:3-6). நாம் கர்த்தரை உண்மையாய் அறிந்திருந்தோமானால், அவருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்து நடப்போம்.

அநேகர் கர்த்தரை அறிந்திருக்கிறேன் என்று சொல்லுகிறார்கள். தினமும் வேதத்தை படித்து தியானிக்கிறார்கள். ஆனால் அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிய மாட்டார்கள். இவர்களை பொய்யர்கள் என்று வேதம் கூறுகிறது. அவர்களுக்குள் உண்மையில்லை. நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியும்போது, தேவ அன்பு முழுமை பெற்றிருக்கும். தேவ அன்பு நமக்குள் இருந்தால் நாம் ஒருவரை ஒருவர் நேசிப்போம். நாம் தேவனைப் பின்பற்றுகிறவர்கள் என்பதை இதிலிருந்து அறிந்துகொள்ளலாம். இயேசு கிறிஸ்து வாழ்ந்ததைப் போல வாழ வேண்டும்.

சிலர் இப்படியாக கூறுவார்கள்: நான் இந்த தலைவரைப் போல பாவம் செய்யவில்லை, இந்த ஊழியக்காரரை மாதிரி இன்னின்ன பாவங்களைச் செய்யவில்லை. அவர் எல்லாம் தப்பு பண்ணுகிறார், அவரது வீட்டில் யாரும் அவரை ஒன்றும் கேட்கவில்லை. நானும் அவர்களைப் போல இருக்கிறேன். என்னையும் அவர்களைப் போல விட்டு விடுங்கள். ஒரு கேள்வியும் என்னை கேட்காதீர்கள் என்று சொல்வார்கள். தீமை செய்ய திரளான பேர்களைப் பின்பற்றாதிருப்பாயாக (யாத்திராகமம் 23:2). பிறர் தவறு செய்கிறார்கள் என்பதால் நாமும் அந்த தவறை செய்யக்கூடாது. தவறு செய்பவர்களோடு நாம் சேரவும் கூடாது. மற்றவர்கள் பாவம் செய்ய நாம் தூண்டுதலாய் இருக்கக்கூடாது. நாம் நம் சரீரத்தை கட்டுப்படுத்தி, கர்த்தருடைய வார்த்தையின்படி நடக்க தீர்மானம் எடுக்க வேண்டும். சரீரத்தின் ஆசை, இச்சைகளை அடக்க வேண்டும். யோசேப்பு, துன்மார்க்கமாய் வாழ்ந்த தன் சகோதரர்கள் மத்தியில் வாழ்ந்தபோதும், அவர்களது பாவத்தை அவன் பின்பற்றவில்லை. பாவம் செய்யும்படியான சூழ்நிலை வந்தபோதும், தேவனுக்கு விரோதமாக பாவம் செய்ய மறுத்தான்.

சிலர் பண விஷயத்தில் பலவீனமாயிருப்பார்கள். பணத்துக்காக எதை வேண்டுமானாலும் செய்வார்கள். சிலர் பெண்கள் விஷயத்தில் பலவீனமாய் இருப்பார்கள். சிலர் கஞ்சத்தனமாயிருந்து, சேர்த்து வைப்பதிலேயே கவனமாயிருப்பார்கள்; யாருக்கும் ஒன்றும் கொடுக்க மாட்டார்கள். சிலர் மற்றவர்கள் ஆஸ்தியின் மேல் ஆசைப்பட்டு அதை எடுக்க தீவிரமாயிருப்பார்கள். சிலர் மற்றவர்களிடம் வாங்குவதிலேயே குறியாய் இருப்பார்கள். சிலர் உழைக்காமலேயே குறுக்கு வழியில் சம்பாதிக்க நினைப்பார்கள். சிலர் மற்ற மனிதர்களை பிரியப்படுத்துவதிலேயே தன் பணத்தையும், நேரத்தையும் செலவழிப்பார்கள். சிலர் சுயநலமுள்ளவர்களாக யார் எப்படி போனால் என்ன, நான் நன்றாக வாழ வேண்டும் என்ற நோக்கத்தோடு இருப்பார்கள்.

சிலர் படிப்பையும், பதவியையும், திறமைகளையும் பெரிதாய் பார்ப்பார்கள். சிலர் பணம் சம்பாதிப்பதற்காக வேலை வேலை என்று

## கர்த்தருடைய

**கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோம் என்பதை அதினால் அறிவோம். அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான். அவனுக்குள் சத்தியமில்லை. அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவஅன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்.**

ஓடிக் கொண்டே இருப்பார்கள். சிலர் மனைவிக்கு அடிமைகளாயிருப்பார்கள். சிலர் தன்னிடம் உள்ள ஆஸ்திகளையும், பணத்தையும் சேர்த்து வைத்துக்கொண்டு, தங்களிடம் ஒன்றும் இல்லை கஷ்டப்படுகிறோம் என்று சொல்லிக் கொண்டு, மற்றவர்களுக்குரியதை கேட்டு வாங்குவதிலேயே குறியாய் இருப்பார்கள். சிலர் மற்றவர்களை வேவு பார்ப்பதிலேயே குறியாய் இருப்பார்கள். யாரை எப்படி, என்ன சொல்லி ஏமாற்றலாம் என்று சுற்றி அலைந்து கொண்டிருப்பார்கள். சிலர் வீட்டில் ஒரு முகம், வெளியில் ஒரு முகம் உடையவர்களாய், பொய் பேசுகிறவர்களாய் இருப்பார்கள். சிலர் மற்றவர்கள் குறைகளைப் பார்த்துக் கொண்டு, தானும் அந்த பாவத்தை செய்ய விரும்புவார்கள். பிரியமானவர்களே, முதலில் நம் கண்ணிலிருக்கிற உத்திரத்தை (மரத்துண்டை) பார்ப்போம். மற்றவர்கள் கண்களிலிருக்கிற (தூசியை) பார்க்காதிருப்போம்.

இயேசு கிறிஸ்து எப்படி பிதாவுக்கு, எப்போதும், மரணபரியந்தம்வரை கீழ்ப்படிந்திருந்தாரோ, நாமும் அவருக்கு கீழ்ப்படிந்து வாழ்வோம். எல்லாவற்றிற்கும் எந்த மனிதர்களையும் முன்மாதிரியாக பார்க்காமல் இயேசு கிறிஸ்துவை முன்மாதிரியாக பார்த்து, அவரைப் போல வாழ்வோம். நாம் எப்படி வாழ வேண்டும் என்று இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வந்து நமக்கு வாழ்ந்து காண்பித்திருக்கிறார். நாம் அவரையே பின்பற்றுவோம். அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலிப்பியர் 2:8).

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு, மறுபடியும் பிறந்து விட்டேன், வேதத்தை தினமும் படிக்கிறேன் என்று சொல்லுகிற அநேகர் பழைய வாழ்க்கையையே வாழ்ந்து கொண்டிருப்பார்கள். அவர்கள் வாழ்க்கையில் ஒரு மாற்றமும் இருக்காது. இரட்சிக்கப்படும் முன் உள்ள சுபாவங்களான கோபம், மூர்க்கம், எரிச்சல், கெட்ட வார்த்தைகள், பொறாமைகள், சண்டைகள், வீண்வம்பு பேச்சுக்கள், பரியாசங்கள், பெருமை, இச்சைகள், விபச்சாரம், வேசித்தனம் எல்லாம் அப்படியே இருக்கும். அபிஷேகம் பெற்ற அநேகர் வார்த்தையின்படி நடவாமல் வழிவிலகிச் செல்கிறார்கள். இரகசிய பாவத்தில் வாழ்ந்து கொண்டு மிகவும் நல்லவர்களைப் போல வெளியே காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவை உடையவர்கள், அவர் என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்வார்கள். தொடர்ந்து அவரைப் பின்பற்றி வாழ்வார்கள். அவரை உண்மையாய் நேசிக்கிறோமா இல்லையா என்பதை அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதன் மூலம் அறிந்துகொள்ளலாம்.

தேவனை உண்மையாய் அறிந்திருக்கிறவர்கள் மட்டுமே அவருக்கு கீழ்ப்படிந்திருப்பார்கள். நாம் வேதத்தின் ஆழமான சத்தியங்களை அறிந்திருக்கலாம். ஆனால் நாம் வார்த்தையை பின்பற்றி நடக்காமல், நம் சுபாவங்களில் ஒரு மாறுதலும் இல்லை என்றால் வேதத்தை குறித்த





அறிவெல்லாம் வீண். இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள். சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார் (யோவான் 8:31,32). அவருடைய போதனைகளின்படி வாழ்கிறவர்களே உண்மையான சீஷர்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் எரிகோ பட்டணத்தைப் பிடித்தபோது, சாபத்தீடானதிலே சிலதை ஆகான் எடுத்துக்கொண்டான். யோசுவா எச்சரித்தும் அவன் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்தான். ஆகான் பாபிலோனிய சால்வையையும், இருநூறு வெள்ளிச் சேக்கலையும், ஐம்பது சேக்கல் நிறையான ஒரு பொன் பாளத்தையும், இச்சித்து எடுத்துக் கொண்டான் (யோசுவா 7:21). அதனால் இஸ்ரவேல் ஜனங்கள் ஆகான் மீதும் அவன் குடும்பத்தார் மீதும் கற்களை வீசினார்கள். அவனுடைய குடும்பமும் அழிந்து போனது.

ஆபிரகாம் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்துத் தன் தேசத்தை விட்டு, தன் இனத்தையும் தன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுக் கிளம்பிச் சென்றான். தன் ஒரே குமாரனாகிய ஈசாக்கை பலி கொடுக்கச் சொன்ன போதும், உடனே கீழ்ப்படிந்துச் சென்றான். நாமும் ஆபிரகாமைப் போல முற்றிலும் கீழ்ப்படிவோம். நம் வாழ்க்கையில் எல்லாப் பகுதிகளிலும் தேவனுக்கு கீழ்ப்படிந்து நடக்கிறோமா என்பதை சிந்தித்துப் பார்ப்போம். கர்த்தருடைய வார்த்தையின்படி நடக்கும்போதுதான் கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்க முடியும். குற்றமற்ற மனசாட்சியை உடையவர்களாய் தேவசமூகத்தில் போய் நிற்க முடியும். நம் ஜெபத்திற்கும் பதில் கிடைக்கும். நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும் (யோவான் 15:7).

நாம் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மேல் விசுவாசமாயிருந்து, அவர் நமக்குக் கட்டளையிட்டபடி ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது (1 யோவான் 3:23). நாம் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டும். உண்மையான விசுவாசம் என்பது, நாம் மற்றவர்களிடம் அன்பாக நடந்துகொள்ளும் முறையிலிருந்து வெளிப்படும்.

நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார் (யோவான் 13:34,35). நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால் (இன்றும் அவர் ஜீவிக்கிறார் என்று நம்பினால்) அவரில் அன்புகூருவோம். அவரில் அன்புகூர்ந்தால், அவருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து நடப்போம். அவருடைய கட்டளை நாம் நம்மிடத்தில் அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்புகூர வேண்டும் என்பதே. ●


வாழ்வில் போராட்டமா?, தேவனுடைய சத்தத்தை கேட்க முடியவில்லையா?, எதிர்காலத்தைக் குறித்த பயமா?, உங்கள் ஜெப தேவைக்கும், தேவ ஆலோசனைக்கும் தயக்கமின்றி தொடர்பு கொள்ளவும். சகோதரரை நேரில் சந்திக்க விரும்புகிறவர்கள் கீழ்கண்ட தொலைபேசி எண்களில் உறுதிப்படுத்திக் கொண்டு வரவும்.



HELP LINE

+91-44-2235 3500

+91-9940667881

nijakennedy@yahoo.com

WWW.KENNEDYMINISTRIES.ORG

# திருநெல்வேலியில்
## வல்லமை பயிற்சி முகாம் – 5வது அணி
















கடந்த பிப்ரவரி மாதம் 21, 22, 23 தேதிகளில் பாளையங்கோட்டையிலுள்ள சமாதானம் ஏ.ஜி. சபையில் நடந்த (சமாதானபுரம்), பரிசுத்த ஆவியின் வரங்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள்

# அதன் பிறகு...

பால்ராஜ் கென்னடி



**விருந்து வீட்டுக்குப் போவதிலும் துக்க வீட்டுக்குப் போவது நலம்; இதிலே எல்லா மனுஷரின் முடிவும் காணப்படும்; உயிரோடிக்கிறவன் இதைத் தன் மனதிலே சிந்திப்பான்** (பிரசங்கி 7:2).

இறந்துபோன ஒரு மனுஷனைப் பார்க்கும்போது, இறப்பைக் குறித்து நாம் சிந்திப்போம். மனிதர்கள் எல்லோருக்கும் இதுதான் முடிவு என்பதை உணர்வோம். மனுஷனுடைய வாழ்க்கையைக் குறித்து ஆழமாக சிந்திப்போம். நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையை அலசி ஆராய்ந்து பார்ப்போம். கடந்த காலத்தில் என்னென்னக் காரியங்களை அடைவதற்காக எப்படியெல்லாம் போராடினோம் என்பதை யோசித்துப் பார்ப்போம். இப்போது இது முக்கியமற்றதாகத் தோன்றும்.

எப்படி வாழ்ந்திருந்தோம் என்பதை யோசித்துப் பார்க்கும்போது, எப்படியெல்லாம் வாழ்ந்திருக்கலாம் என்பது நமது நினைவிற்கு வரும். எதையெல்லாம் கடந்த காலத்தில் பெரிதாக நினைத்திருந்தோமோ அதுவெல்லாம் இப்போது மிகச் சாதாரணமானக் காரியமாகத் தோன்றும்.

கடந்த காலங்களில், எதையெல்லாம் சிந்தியாமல் விட்டு விட்டோம் என்பது நம் நினைவிற்கு வரும். இப்போது அந்த விட்டுவிட்டக் காரியங்களில் எவற்றையெல்லாம் நம்மால் செய்ய முடியும் என்பதை கவனமாக யோசித்துப் பார்ப்போம்.

இனிமேல், நாம் வாழ்க்கையை இப்படியிப்படி வாழ வேண்டுமென்று தீர்மானிப்போம். முக்கியமாக, சுயம் இல்லாமல் இருக்கும்படி தீர்மானங்களை எடுப்போம். யார் நம்மை வெட்கப்படுத்தினாலும், துக்கப்படுத்தினாலும், ஏளனம் செய்தாலும், அதை சகித்துக் கொண்டு வாழவேண்டுமென்று முடிவு எடுப்போம்.

இந்த நினைவுகள், சிந்தனைகள், யோசனைகள் நமக்கு திருப்தியையும், சமாதானத்தையும் தரும். எல்லோருடனும் சமாதானமாய், அன்பாய் பழக வேண்டும் என்பதில் உறுதியாய் இருப்போம். யாரோடும் விவாதம் பண்ணவோ, சண்டை யிடவோ கூடாது என்பதில் உறுதியாய் இருப்போம். யாரையும் எக்காரணத் தைக் கொண்டும் அசட்டை பண்ணக்கூடாது, புறக்கணிக்கக் கூடாது, கனப்படுத்த வேண்டும் என்பது நமது நோக்கமாக இருக்கும்.

அவர்கள் எப்படியெல்லாம் சிந்தித்து வாழ்ந்திருப்பார்கள்... இதோ அவர்களுடைய வாழ்க்கை முடிந்து விட்டது. எனக்கும் இதுதானே முடிவு. சாதனை படைத்தவர்களின் வாழ்க்கையெல்லாம் முடிவுக்கு வந்து விட்டதே. நாம் எதை சாதிக்கப் போகிறோம்? எதற்காக ஓடுகிறோம்? எதை பிடிக்கப் போகிறோம்? அதன் பிறகு...

இதுவரை இன்னின்னக் காரியங்கள் நம்மை அழுத்திக் கொண்டிருந்தது என்பதை நினைவுகூர்வோம். அவற்றையெல்லாம் மேற்கொள்ள வேண்டும் என்பதை தீர்மானிப்போம்.

காலத்தைப்பற்றி யோசித்துப் பார்ப்போம். எப்படி காலத்தை செலவழித்தோம் என்பதை கவனமாக சிந்தித்துப் பார்ப்போம். இனிமேல் காலத்தை எப்படி பிரயோஜனமாக செலவழிக்க வேண்டுமென்பதை சிந்திப்போம். காலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்வோம்.

ஒவ்வொரு மனுஷனும் எப்படியெப்படி நடந்துகொள்ளுகிறான், எப்படி நடக்க வேண்டிய வன் எப்படி நடக்கின்றான் என்பதையும், முக்கியமாக எவற்றை அவர்கள் அறியாதிருக் கிறார்கள் என்பதும் நம் நினைவில் பளிச்சென்று தெரியும். ஒரு மனுஷன் எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும், எந்தக் காரியம் அவனுக்கு பிரதானமாக இருக்க வேண்டும் என்பது நமக்கு மிக முக்கியமாகக் காணப்படும்.

இந்த நினைவுகள் நம்மை பலப்படுத்தும். நமது வாழ்க்கையை, முக்கியமாக ஒரு மனுஷனுடைய வாழ்க்கையை முதலிலிருந்து முடிவு வரை அலசி ஆராய்ந்து பார்க்கும் கண்ணோட்டம் நமக்கு வந்து விடும். எந்தவொரு காரியத்திற்கும் அவசரப்பட மாட்டோம். எல்லாவற்றிலும் நிதானமாக செயல்பட ஆரம்பிப்போம். ஒரு காரியத்தைச் செய்ய முற்பட்டு, அது தடையாகி நின்று போனால், அதற்காக சோர்வடைய மாட்டோம். அதேபோல, ஒரு காரியம் எளிதாக முடிந்து போனால், அதற்காக அதிகமாக சந்தோஷப்பட மாட்டோம்.

இதுவெல்லாம் எப்படி நமக்கு சாத்தியப்பட்டதென்றால், நமக்குள் ஏற்பட்ட சிந்தனைகளினாலும், யோசனைகளினாலுமே. எப்படி இதுவரை இல்லாத சிந்தனைகளும், யோசனைகளும் நமக்குள் வந்தது என்றால், ஒரு மனுஷனுடைய இறப்பை (முடிவை) பார்த்ததினா லேயே. அந்த மனுஷனுடைய முடிவு போலத்தான் எனக்கும் முடிவு வரப்போகிறது, என்னுடைய வாழ்க்கையின் முடிவு இப்படித்தான் என்பதை நாம் காண்கிறோம்.

இந்த பூமியில் என் வாழ் நாட்கள் இவ்வளவு தான் (சங்கீதம் 90:12, 39:4) என்ற அறிவும், ஞானமும் நமக்கு வந்து விடுகிறது. என் வாழ்க்கை ஒரு நிழலைப் போல ஓடிவிடும் என்ற உணர்வு நமக்குள் வந்து விடுகிறது. நான் நிலையற்றவன், என் காலங்கள் கர்த்தருடைய கரத்தில் இருக்கிறது (சங்கீதம் 31:5), என் சுவாசம், ஜீவன் எல்லாம் அவர் கரத்தில் இருக்கிறது, கர்த்தர்தான் என் வாழ்க் கையை நடத்திச் செல்கிறார், இப்படிப்பட்ட உணர்வு கள் நம்மை ஆட்கொள்கின்றன. அது நம்மை பரிபூரணமான, முழுமையான மனுஷனாக்குகிறது. நம்முடைய வாழ்க்கையையும் பரிபூரணப்படுத்து கிறது. கர்த்தரைச் சார்ந்து வாழ ஆரம்பிக்கிறோம்.

என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும், செய்தித்தாளை நான் வாசிக்கும்போது, தவறாது, கவனமாக, இறந்தவர்களின் புகைப்படங்களுடன் கூடிய பிறப்பு, இறப்பு விவரங்களைப் படிப்பேன். அவர்கள் எப்படியெல்லாம் வாழ்ந்திருப்பார்கள் என்பதை யோசித்தும், கற்பனை செய்தும் பார்ப்பேன். அவர்கள் எப்படியெல்லாம் சிந்தித்து வாழ்ந்திருப்பார்கள்... இதோ அவர்களுடைய வாழ்க்கை முடிந்து விட்டது. எனக்கும் இதுதானே முடிவு. சாதனை படைத்தவர்களின் வாழ்க்கை யெல்லாம் முடிவுக்கு வந்து விட்டதே. நாம் எதை சாதிக்கப் போகிறோம்? எதற்காக ஓடுகிறோம்? எதை பிடிக்கப் போகிறோம்? அதன் பிறகு... ●